**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.136/2019 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.3 |
| Name : | | திரு.துரைசாமி |
| Father's/Husband Name: | | திரு.சின்னசாமி |
| Village : | | நமையூர் |
| Taluk : | | குன்னம் |
| Age : | | 53 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.06.2023.

**முதல் விசாரணை :–**

01. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். 2017ம் வருடம் லோகநாதன் காட்டில் வைத்து திருடு போனது சம்மந்தமாக போலீசார் அந்த காட்டை பார்ப்பதற்காக கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். (அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும்.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–(1ம் எதிரிகள் ஆஜர்). 2,ம் எதிரி ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

01. அ.சா.1 எனது உறவினர் என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்ட தாளில் வேறு யார் கையொப்பம் போட்டார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதி, எந்த மாதம் கையொப்பம் போட்டேன் என்று எனக்கு தெரியாது

என்றால் சரிதான்.

02. நான் சம்பவ இடத்தில் கையொப்பம் போடவில்லை என்றாலும், அ.சா.1 எனது உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் கையொப்பம் போட்டுவிட்டு சம்பவயிடத்தில் போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கின்றனே் என்றால் சரிதான்.